# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>
## <u>O.S. No.153/ 2022</u>

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 08ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திரு.எம்.சீனிவாசன் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **ஞானசம்மந்தம்** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | **கன்னியப்பிள்ளை** | **கிராமம்** | : | |
| **வயது** | : | 68 | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 12.30** | | : | |

**<u>வா.சா.1 முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் வாதி , நான் வாதி தரப்பு சாட்சி ஆவேன் . என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் . அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும்.

1) கடந்த 06.02.2014 அன்று சந்திரன் வகையறா கீதா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அந்த கிரய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) கீதா என்பவர் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்கிறேன். (கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்டது) அந்த பட்டா வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) எங்கள் குடும்பத்தில் எங்கள் தந்தை மற்றும் குடும்பத்தினர்களுக்கிடையே ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்அசல் தாக்கல் செய்கிறேன். அந்த பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 28.02.1994 தேதியிட்ட ஸ்ரீனிவாச அய்யங்கார் எனக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல்தாக்கல் செய்கிறேன் . அந்த கிரய அவணம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) என் பெயரில் உள்ள கணினி பட்டா தாக்கல் செய்கிறேன் . அந்த கணினி பட்டா வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) கடந்த 13.08.2022 அன்று நான் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை தாக்கல் செய்கிறேன் . அந்த வழக்கறிஞர் அறிவிப்பு வா .சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கான அஞ்சலக ரசீது தாக்கல் செய்கிறேன். அந்த அஞ்சலக ரசீது அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பபட்டு அந்த அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதை காட்டுவதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் தாக்கல் செய்கிறேன் ( எண்ணிக்கை 5) அந்த அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் வா .சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.